பாரதீய ஜனதா கட்சி
(மத்திய அலுவலகம்)
11, அசோக் சாலை, புது தில்லி – 110001
தொலைபேசி : 23005700; நகல்: 23005787

நாள்: ஜனவரி 30, 2014

பா.ஜ.க தேசிய செய்தி தொடர்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான
ஸ்ரீ பிரகாஷ் ஜவதேகர் வெளியிட்ட அறிக்கை

1. வங்கி விகிதத்தை 0.25 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தும் இந்திய ரிசர்வ் வங்கியின் திடீர் முடிவு, விலைவாசியை குறைக்கப் போவதில்லை இந்த நடவடிக்கை எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதோடு, பற்றியெரியும் விலை உயர்வுக்கு எண்ணெய் ஊற்றப் போகிறது. வங்கிவிகிதம், சி.ஆர்.ஆ, ரெப்போ விகிதம் மற்றும் தலைகீழ் ரெப்போ விகிதம் ஆகியவற்றை ஐக்கிய முற்போக்கு கூட்டணி பல முறை உயர்த்தியுள்ளது. ஆனால் இவற்றால் எந்தப் பயனும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. விலைவாசி உயர்வை எதிர்கொள்வதற்கான அரசின் உத்தி வட்டி விகிதங்களை உயர்த்துவதன் மூலம் தேவையை நெருக்குவதுடன் சுருங்கிவிடுகிறது.

.தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியைவிட்டு விலகியபோது, 6%ஆக இருந்த வங்கி விகிதமும் ரெப்போ விகிதமும் ஐ.மு.கூ அரசால் 9%ஆக் உயர்த்தப்பட்டுவிட்டன. . இது உயர் வட்டி விகித அரசாட்சிக்கு வித்திட்டு, ஏற்றுமதி தொழில்களுக்கு நெருக்கடி அளித்திருப்பதோடு, வங்கிக் கடனை திருப்பி செலுத்துவதற்கான மாதாந்திர தவணைத் தொகையை (ஈ.எம்.ஐ) உயர்த்தி நடுத்தர வர்கத்தினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிகரித்துவிட்ட நிதிச் செலவுகள் பொருளாதாரத்தின் அனைத்து பிரிவுகளிலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

ஐ.மு.கூ அரசு உற்பத்தியை பாதிக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதில் எப்போதும் வெற்றியடைந்ததில்லை. இதன் மூலம் பணவீக்கத்தையும் கட்டுப்படுத்த முடியாமல்போகிறது. இந்த நிலை, மன்மோகன் சிங் மற்றும் சிதம்பரத்திடம் பொருளாதாரத்துக்குப் புத்துயிரூட்டுவதற்கான யோசனைகள் தீர்ந்துபோய்விட்டதன் விளைவே ஆகும்.

2. .ஒரு ஆண்டில் ஒரு குடும்பத்துக்கு மானிய விலையில் வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கையை 9இலிருந்து 12ஆக உயர்த்துவதாக அறிவிக்கப்படுவதற்கான சாத்தியம் இருப்பதை மக்கள் கொண்டாட வேண்டும் என்று காங்கிரஸ் அரசு விரும்புகிறது. காங்கிரஸைப் பாராட்டும் மனநிலையில் மக்கள் இல்லை.. மாறாக அவர்கள் ஒரு எளிமையான கேள்வியைக் கேட்கிறார்கள். மானிய விலை சமையல் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கையில் அதிகபட்சம் 6 என்ற கட்டுப்பாட்டை விதித்தது யார் என்பதே அந்தக் கேள்வி. ஒட்டுமொத்த விலைவாசி உயர்வைக் காரணம் காட்டி மானிய விலை சமையல் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை மீது கட்டுப்பாடு விதித்தது மக்கள் விரோத முடிவாகும். இந்த நடவடிக்கையை எடுத்ததற்காக மக்கள் ஐ.மு.கூ அரசை மறக்கவும் மாட்டார்கள் மன்னிக்கவும் மாட்டார்கள். ஜூலை 2012 வரை

அனைத்து குடும்பங்களும் மானிய விலையில் போதுமான அளவு சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக் கொண்டிருந்தன. ஆகஸ்ட் 2012இல் ஐ.மு.கூ அரசு அதை நிறுத்தியது.

தேசிய ஜ்னநாயக கூட்டணி ஆட்சியைவிட்டு விலகியபோது சமையல் எரிவாயு சிலிண்டரின் மானியத்தை உள்ளடக்கிய விலை ரூ.224ஆக இருந்தது. இப்போது அது ரூ.415ஆக உயர்ந்திருக்கிறது. மேலும் மானியமில்லாத ஒவ்வொரு சிலிண்டரையும் மக்கள் ரூ.1241 கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. .மிகையாக விளம்பரப்படுத்தப்பட்ட மக்களுக்கான மானியங்களை அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்திவிடும் திட்டம் இன்னும் பல குடும்பங்களைச் சென்று சேரவும் இல்லை. அவர்களுக்குப் பயன்தரவும் இல்லை.

**(பொறியாளர் அருண் குமார் ஜெயின்)**
*அலுவலக செயலாளர்*